IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.49/2015

Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சொக்கலிங்கம் | Caste | : | |
| Father Name | : | துரைசாமி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of December, 2024.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி சுப்பிரமணி எனது அக்காவின் மகன். எனது அண்ணன் மகளை வாதி திருமணம் செய்துகொண்டுள்ளார். வழக்கு சொத்தை நானும் எனது அண்ணனும் வா.சா.3 ஆன முனுசாமியும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எனக்கு வரப்பெற்றது என்றால் சரிதான்.

2. எனக்கு தமிழ் படிக்கத் தெரியாது. எனது முதல் விசாரணை பிரமாண பத்திர ஆவணம் காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது. 1988ல் கிரயம் கொடுத்தோம். ரூ.9000/- க்கு கிரையம் பேசி அந்த தொகையை சிறிது சிறிதாக பைசல் செய்துவிட்டார். நாங்கள் கிரையம் கொடுத்த ஆவணத்தில் மேற்படி தொகையை கிரையத் தேதியன்றே பெற்றுக்கொண்டதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிட்டால்தான் அது செல்லும் என்பதால் அவ்வாறு குறிப்பிட்டோம்.

3. வாதி சுப்பிரமணியும் 1ம் பிரதிவாதி சுப்பிரமணியமும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சுப்பிரமணியம் வாதி சுப்பிரமணியின் அண்ணன் ஆவார். இருவருக்கும் 5 வயது வித்தியாசம்

இருக்கும். மேற்படி கிரையம் கொடுத்தபோது 1ம் பிரதிவாதி இராணுவத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். இராணுவத்தில் அவர் 2-3 ஆண்டு வரை பணிபுரிந்திருப்பாரா என்றால் அதற்கு மேலான வருடங்கள் பணிபுரிந்திருப்பார்.

4. மேற்படி கிரையத் தேதியன்று வாதி இராணுவத்தில் பணிக்கு சென்றாரா என்றால் சென்றுவிட்டார். வாதி இராணுவத்தில் எத்தனை வருடங்கள் வேலை பார்த்தார் என்றால் 3 வருடங்கள் அவர் இராணுவத்தில் வேலை பார்த்திருப்பார். அப்போது வாதிக்கு 22-23 வயது இருக்கும். நான் அவ்வாறு கூறுவது பொய் என்றும், வாதியே அவரது சாட்சியத்தில் 17 வயது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு கவனம் இல்லை. அவர் எப்பொழுது வேலையில் சேர்ந்திருப்பார் என்று எனக்கு தெரியாது.

5. நான் வேலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சாட்சியம் அளிக்க சென்றேனா என்றால் சென்றேன். 20.03.2023 அன்று சாட்சியம் அளிக்க சென்றேன் என்றால் சரிதான். அப்போது என் அண்ணன் முனுசாமியும் உடன் வந்தார். அங்கு அளித்த வாய்மொழி சாட்சியத்தில் 1ம் பிரதிவாதி சுப்பிரமணியம் என்பவருக்குத்தான் கிரையம் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தவறு. வாதிக்குத்தான் கிரையம் கொடுத்தேன்.

6. அதன் பின்னிட்டு தான் கடந்த 03.04.2023 அன்று தானாகவே நான் சென்று எழுத்து மூலம் நான் அவரிடம் ஏற்கனவே அளித்திருந்த வாய்மொழி சாட்சியத்திற்கு முரணாக வாதிக்கு கிரையம் கொடுத்ததாக சாட்சியம் அளித்ததால் மேற்படி மாவட்ட பதிவாளர் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

7. நான் ஏற்கனவே மாறிமாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது இந்நீதிமன்ற சாட்சியத்தில் நம்பகத்தன்மை இல்லை என்பதால் எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் கொடுத்த ஆவணத்தில் ராஜேந்திரன் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான், அவர் தற்போது உயிருடன் இல்லை.

8. மேற்படி பதிவாளரிடம் நடைபெற்ற விசாரணையில் மேற்படி ராஜேந்திரன் 1ம் பிரதிவாதியிடம்தான் கிரையம் செய்து கொடுக்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் தவறு. என் அண்ணனின் மகளை வாதி திருமணம் செய்துகொண்டுள்ளதால் என் அண்ணன் மகளுக்கு எந்த பிரச்சனையும் ஏற்படக்கூடாது என்பதற்காக 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளதை மாற்றி வாதிக்கு கிரையம் செய்துகொடுத்ததாக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது பொய்.

9. மேற்படி மாவட்ட பதிவாளரிடம் நடைபெற்ற விசாரணையில் எழுத்துமூலமான எனது சாட்சியத்தில் வாதிக்கு 17 வயது என்பதாக குறிப்பிட்டுவிட்டு தற்போது நீதிமன்றத்தில் 22–23 வயது இருக்கும் என்று பொய் கூறுகிறேன் என்றால் 17 வயது என்பதுதான் சரி. வாதிக்கு 17 வயது உள்ள நிலையில் அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும் கிரையம் பெறும் அளவிற்கு அவரிடம் பண வசதி இல்லை என்றும் 1ம் பிரதிவாதி சம்பாதித்த பணத்தை வைத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் நான் பணம் வாங்கவில்லை. வாதியின் அப்பா அம்மா ஆகியோர்தான் பணம் கொடுத்தார்கள்.

10. நான் மேற்கூறிய சங்கதிகள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் வாதி இளவர் என்பதை நாங்கள் செய்துகொடுத்த கிரைய ஆவணத்தில் இளவர் என்பதை குறிப்பிட்டிருப்போம் என்று சொன்னால் வாதிக்குத்தான்

கிரையம் கொடுத்தோம். அவரது பெற்றோர்கள் கிரையம் கொடுக்க சொன்னதால் வாதிக்கு கிரையம் கொடுத்தோம். மேலே நான் கூறிய சங்கதிகள் எதுவும் மேற்படி கிரையம் செய்த ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

11. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை = இல்லை

(Sd/-)..K.Venkatesan
DISTRICT MUNSIF
KATPADI